மாவட்ட ஆட்சியர் செய்திக் குறிப்பு

சிவகங்கை மாவட்டத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை கீழ் மிஷன்வாட்சல்யா திட்டத்தின்கீழ் செயல்பட்டு வரும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தில் புதிதாக நிரப்பப்படவுள்ள ஒரு பாதுகாப்பு அலுவலர் (நிறுவனம் சாரா) பணியிடம் மாதம் ஒன்றிற்கு ரூ.27,804/- (ரூபாய் இருபத்து ஏழாயிரத்து எண்ணூற்று நான்கு மட்டும்) தொகுப்பூதியத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய அங்கீகரிக்கப்பட்ட பல்கலை கழகத்தில் சமூக பணி (Social work) / சமூகவியல் (Sociology) குழந்தை வளர்ச்சி /மனித உரிமைகள் (பொது நிர்வாகம்) /உளவியல் /மனநலம் /சட்டம் /பொது சுகாதாரம்/ சமுதாய வள நிர்வாகம் இவற்றில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாடப்பிரிவில் அங்கீகரிக்கப்பட பல்கலை கழகத்தில் **முதுகலை பட்டம் பெற்றிருக்க வேண்டும்** (அல்லது) ஏதேனும் ஒரு இளநிலை பட்டப்படிப்புடன் பெண்கள் மற்றும் குழந்தை வளர்ச்சி / சமூக நலன் பணிகளில் திட்டமிடல்/ நடைமுறைப்படுத்துதல் / கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையிடுதலில் இரண்டு வருட முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். மேலும், கணினி கையாளுவதில் முழுதிறன் பெற்றிருக்க வேண்டும்.

புறத்தொடர்பு பணியாளருக்கு மாதம் ஒன்றிற்கு **ரூ.11,574/- (ரூபாய் பதினோராயிரத்தி ஐநூற்றி எழுபத்தி நான்கு மட்டும்)** தொகுப்பூதியத்தில் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவுள்ளன. அதற்கான கல்வி தகுதி 12ம் வகுப்பு முடித்திருக்க வேண்டும் மற்றும் குழந்தைகள் தொடர்பான பணி செய்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேற்காணும் பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை www.sivagangai.nic.in என்ற இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம், அல்லது மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம், பூர்த்திசெய்த விண்ணப்பங்களை உரிய சான்றிதழ்களுடன் இணைத்து **மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், அறை எண்.131, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,** சிவகங்கை - 630562 என்ற முகவரிக்கு 10/06/2026 அன்று மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும். மேலும் விபரங்களுக்கு (அ) 04575-240166 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சியர்,
சிவகங்கை.

Scanned with OKEN Scanner